# மட்டக்களப்பில் தற்கொலை ஓர் சமூகவியல் நோக்கு.

பகீரதி மோசேஸ்
சமூக விஞ்ஞானத் துறை
கிழக்குப் பல்கலைக் கழகம்

## 1. அறிமுகமும் ஆய்வு முறைமையியலும்:

### 1.1 அறிமுகம்

உலகளாவிய ரீதியில் தற்கொலை செய்து கொள்ளும் வீதம் நாள்தோறும் அதிகரித்துக் கொண்டு வருவதை அவதானிக்க முடிகிறது. இந்த வகையில் அதிகளவில் தற்கொலை இடம்பெறும் நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். இங்கு இடம்பெறும் தற்கொலைகளில் அநேகமானவை கிராமப்புறங்களில் இடம்பெறுகின்றது. இங்கு தற்கொலை செய்துகொள்வது சட்டவிரோதமாகக் கருதப்பட்டு வந்தது. ஆனால் குற்றவியல் தண்டனைக்கோவையில் பிரிவு 302, 1998 யூனில் அரசாங்கத்தினால் நீக்கப்படமை தற்கொலையை தண்டனைக்குட்படாத நிலைக்குக்கொண்டுவந்துள்ளது. தற்கொலைக்கு ஊக்கமளிப்பதைவிட தற்கொலை செய்து கொள்ள அடிப்படையாக அமையும் சமூக, உளவியல் காரணங்களைப் புரிந்துகொள்ள வேண்டியதன் அவசியத்தை தற்கொலை தண்டனைக்குட்படா நிலை வலியுறுத்துகின்றது. எவ்வாறுதான் சட்டம் கொண்டு வரப்பட்டாலும் தற்கொலை செய்துகொள்ளுதல் என்பது குறைந்தபாடில்லை. இலங்கையை எடுத்துக்கொண்டால் இதற்கு பல் காரணங்களைக் கூறலாம் இதனடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் ஒவ்வொரு நாளும் தற்கொலை இடம் பெற்றுக்கொண்டிருக்கிறதை நம் கண்முன்னே காணக்கூடியதாக உள்ளது. விவசாயம், மீன்பிடி ஆகிய இரண்டு தொழில்களையும் பிரதானமாகக் கொண்டதே எமது மாவட்டம். இங்கு வாழுகின்ற மக்கள் பல காரணங்களுக்காக பல்வேறுபட்ட முறைகளையும் கையாண்டு தற்கொலை செய்வதைக் காணக்கூடியதாக உள்ளது. இதனால் பல சிக்கல்களைச் சமூகம் எதிர் நோக்கவேண்டி உள்ளது. எனவே இம் மாவட்டத்தில தற்கொலை அதிகரிக்க காரணம் என்ன? இதனால் எவ்வாறான பிரச்சினைகள் உருவாகின்றது, இவர்களை எவ்வாறு அதிலிருந்து மீளவைப்பது, இதனை கட்டுப்படுத்த எவ்வாறான வழிகளை மேற்கொள்ளுதல் வேண்டும் எனும் நோக்குடன் இங்கு ஆய்வு செய்யப்படுகிறது.

### 1.2 ஆய்வின் நோக்கம்.

உலக சனத்தொகையின் மரண வீதத்தில் தற்கொலைகளால் ஏற்படும் மரணமே கணிசமானது. இதே வீதத்தில் எமது நாட்டிலும் தற்கொலை அதிகரித்துக் கொண்டு செல்கின்றது. எமது மாவட்டமான மட்டக்களப்பிலும் தற்கொலை செய்வோரின் வீதம் அதிகரித்துச் செல்லும் நிலை காணப்படுகின்றது. ஆகவே இவ்விடயம் சமூகவியல் ரீதியாக ஆராயப்பட வேண்டியதொன்றாகும்.

தங்களை எதிர்கொள்ளும் சிறுசிறு பிரச்சினைகளுக்குக்கூட முகங்கொடுக்க முடியாமல் ஏதோவொரு வகையில் தம்மைத்தாமே அழிக்கும் முயற்சிகளையும் தற்கொலைகளையும் செய்கின்றார்கள். மனிதன் ஒரு சமூகப்பிராணி. அவனது இயங்கியல் மட்டத்தில் பல்வேறுபட்ட சிக்கல்கள் தோன்றுவதும் மறைவதும் யதார்த்தமனது. ஆகவே பகுத்தறிவுள்ள மனிதன் இவற்றையெல்லாம் புத்தி சாதுரியமாக எதிர் கொண்டு வாழ்க்கையை முழுமையாக வாழ பழக்கி கொள்ளவேண்டும். மாறாக வாழ்க்கையை அழித்துக் கொள்ளக் கூடாது.

இந்த ஆய்வானது. மனிதன் தான் எதிர் நோக்கும் சிக்கல்களுக்கெல்லாம் தற்கொலை செய்வதுதான் முடிவா? இவ்வாறு தற்கொலை செய்வதால் அவர்களது பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்துவிடுமா? என்பவற்றைத் தெளிவு படுத்துவதாகவும், தற்கொலை செய்வதனால் அவர்களது குடும்பம், சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்ன? என்பவற்றை இனங்காட்டுவதாகவும், தற்கொலை செய்யத்துணிபவர்களின் உணர்வலைகளை அறிந்து அதிலிருந்து அவர்களை எவ்வாறு மீட்டெடுப்பது, இதனைக் கட்டுப்படுத்த சம்பந்தப்பட்டோர் எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பவற்றை சுட்டிக்காட்டுவதாகவும், இவற்றை நாம் கடைப்பிடித்தால் தற்கொலை முயற்சிகளையும், தற்கொலைகளையும் அதன் பாரிய பின்டைவுகளையும் ஓரளவாவது குறைக்கலாம் என்று வலியுறுத்துவதாகவும் அமைகிறது.

## 1.3 ஆய்வு முறையும் தரவு மூலங்களும்:

ஆய்வு ஒன்றினை திறமையாகச் செய்து முடிக்க அவ்வாய்வுக்கு தேவையான தகவல்களையும் தரவுகளையும் பெற்றெடுப்பது முக்கியமானதாகும். இவ் ஆய்வுக்குத் தேவையான முதல் நிலைத் தரவுகளாக பேட்டி காணுதல், பங்குபற்றி அவதானித்தல், கள ஆய்வு, கேள்விகளுக்கான பதில் வினாக்கொத்து கலந்துரையாடல் என்பவற்றின் மூலம் பெறப்பட்டுள்ளது.

இரண்டாம் நிலைத்தரவுகளாக பல்வேறு இடங்களிலிருந்தும் பெறப்பட்ட புத்தகங்கள், புள்ளிவிபரங்கள், மட்டக்களப்பு பொதுமருத்துவமனை, நீதிமன்ற பதிவுகள், கச்சேரி, பிரதேச செயலகம் போன்ற இடங்களிலிருந்து பெறப்பட்ட தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## 1.4 ஆய்வுக்கோட்பாடு:

தற்கொலை பற்றி பல்வேறு அறிஞர்கள் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர். இவர்களில் முக்கியமானவர் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த புகழ்பெற்ற சமூகவியல் அறிஞரான எமைல் டுர்கைம் ஆவார். சிக்மன்ட் ப்ரெய்ட், கார்ல் மன்னிஸ்கஸ், வெஸ்ஸில் வென்ஸில். Elliott and Merrill, Mowrer, Ruth . s. Caven, போன்ற அறிஞர்களும் தற்கொலை பற்றிய கோட்பாடுகளை முன்வைத்தவர்களாவார்கள். Signund Freud மனித மனத்தை மூன்றாகப் பிரிக்கிறார். அவை Id, Ego, Super ego என்பனவாகும். இவரது கருத்துப்படி மனிதன் சில இலக்குகளை மையமாக வைத்தும், சில கருத்துக்களையும் சாாந்து வாழ்கின்றான். இவை கிடைக்காவிட்டால் வாழ்வு இல்லையென்று தற்கொலை செய்ய முயலுகின்றான் என்பதே இவரது கருத்தாகும். Karl Mannigers ன் கருத்தை நோக்கினால் எங்களைக் கொல்லுதல் என்ற விலை எங்களுக்குள் அகப்பட்டு சாவதற்கான விருப்பமாக மாற்றம் பெற்று இறுதியில் தற்கொலைக்கு இட்டுச் செல்கிறது என்று குறிப்பிடுகின்றர். அடுத்து Benzil ன் கோட்பாட்டை நோக்கும் போது உளரீதியான கருத்துக்கள்தான் தற்கொலைக்கு இட்டுச் செல்கின்றது என்கிறார். அதாவது அச்சம், பதட்டம், தாழ்வு மனப்பான்மை, தன்னைத்தானே வெறுப்பது, குற்ற மனப்பான்மை போன்ற காரணிகளே தற்கொலைக்கு இட்டுச் செல்கின்றது என்பது இவரது கருத்தாகும்.

இவர்களது கருத்துக்கள் பல விமர்சனங்களுக்குள்ளானது. சமூகவியலறிஞரான Email Durkheim ன் கோட்பாடே தற்கொலை பற்றிய ஆழமான கருத்துக்களை எடுத்துக் கூறுகின்றது. சமூகச் சூழ்நிலைகளும் கூட்டான உணர்வுகளும்தான் தற்கொலைக்கு முக்கிய பொறுப்பு என்பது இவரது கருத்தாகும். இவர் மனிதனின் தனிப்பட்ட குணங்களை அடிப்படையாக வைத்து தற்கொலையை Egoistic Suicide, Altruistic Suicede, Anomic Suicide என மூன்று விதமாக பிரித்துக் கூறுகின்றார். தற்புகழ்ச்சிக்கும், சுயமரியாதைக்குும் அதிக முக்கியத்துவம் கொடுப்பவர்கள் செய்து கொள்ளும் தற்கொலையே Egoistic Suicide ஆகும். ஒரு குழுவுக்காகவோ, சமுதாய நலனுக்காகவோ செய்யும் தற்கொலை Alturistic suicide எனப்படும். Anomic sucide என்பது சமூகத்தில் ஏற்படும் சீர்குலைவினாலும், பதட்டத்தினாலும்

ஏற்படுவதாகக் கூறுகின்றார். இந்த அனைத்து விதமான தற்கொலைகளுக்கும் முக்கிய காரணி சமூக முறிவாகும். அறிஞர்களின் கூற்றுக்களை வைத்து நோக்கும்போது தற்கொலை என்பது ஒருவர் தன்னைத்தானே அழித்துக்கொள்வதுடன் உளவியல், உடலியல், சமூகம் சார்ந்த விடயமாகக் காணப்படுகின்றது. எனவே, எமைல் டெர்கைமின் கோட்பாட்டை அடிப்படையாக வைத்தே இவ் ஆய்வு செய்யப்பட்டது.

## 2. உலகளாவிய ரீதியில் தற்கொலை:

பொதுவாக எல்லா நாடுகளிலும் தற்கொலை செய்து கொள்வதென்பது இடம்பெறுகின்றது. ஆரம்ப காலங்களில் தற்கொலை செய்வது குற்றமாகக் கருதப்படவில்லை. ஆனாலும் சில நாடுகளில் தற்கொலை ஒரு கொலைக் குற்றமாகக் கருதப்பட்டது. இதனை இங்கிலாந்திலும், வேல்சிலும் செயற்படுத்தி இருந்தார்கள். ஒரு பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வதற்கு தற்கொலையே ஒரு சிறந்த முடிவு என்றும், இது ஒரு அமைதியான செயற்பாடென்றும் சிலர் கருதுகின்றனர். தற்கொலை செய்யத் துணிபவர்களுக்கு அவ்வெண்ணம் மனதில் சிற்பம் போல் சிறுகச்சிறுக செதுக்கப்படுகின்றது. இது பற்றிய கருத்துக்கள், செய்திகள் அதற்கான காரணங்கள் தொன்று தொட்டு பல்வேறு விதமாக சொல்லப்பட்டு வருகின்றன. இது இடம்பெறாத சமூகம் எங்குமில்லை. எல்லா சமூகங்களிலும் இது இடம்பெற்றுக்கொண்டே இருக்கின்றது. இதனை ஒவ்வொரு சமூகமும் ஒவ்வொரு விதமாக பார்க்கின்றது. சில சமூகம் இதனை பயங்கரமானதொரு கொடுஞ்செயல் எனக் கருதுகின்ற போதிலும், வேறு சில சமூகங்கள் இதனை தமது கலாசாரத்திற்குட்பட்ட விடயமாகவே கருதுகின்றன.

புராதன ஐரோப்பாவில் குறிப்பாக ரோமானிய பேரரசு நிலைபெற்றிருந்த காலத்தில் தற்கொலை என்பது அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகவும், சில சமயங்களில் கௌரவம் மிக்கதொரு நடவடிக்கை எனவும் கருதினர். ஆபிரிக்க நாடுகளிலுள்ள பழங்குடியினர் இதனை தீண்டத்தகாதவொரு செயலாகவே கருதுகின்றனர். அதுமட்டுமின்றி இவ்வாறு தற்கொலை செய்பவர்களின் உடலை தொடுவதுகூட பாவம் என்றும் இவர்களின் அசுத்த ஆவிகள் தங்கள் மத்தியில் உலாவுகின்றன என்றும் நம்புகின்றனர். இதேபோன்று இந்தியாவில் குறிப்பாக கேரளாவின் மலைவாழ் பகுதிய மக்கள் மத்தியிலும் நம்பப்படுகின்றது.

ஆசிய சமூகத்தில் தற்கொலை என்பது அருவருக்கத்தக்கதொன்றாகவே எண்ணப்படுகின்றது. கூட்டுக் குடும்பத்தை அடிப்படையாகக் கொண்ட இச்சமூகத்தில் தற்கொலை செய்ய முயற்சிப்பவர்களை தமது முக்கிய சம்பிரதாய வழமைகளிலிருந்து ஒதுக்கி வைத்தனர். தற்கொலை செய்பவர்கள் ஆவிகளாக உலவித்திரிவார்கள் என்று இப்போதும் இவர்கள் நம்புகின்றனர். இந்தியாவில் தொன்று தொட்டு இருந்து வந்த "சதி" எனும் உடன் கட்டை ஏறும் பழக்கமும் தற்கொலையாகவே கருதப்படுகின்றது. கிறிஸ்தவ மதத்திலும், இஸ்லாமிய மதத்திலும் தற்கொலை செய்து கொள்வது பெரும் குற்றமாகவே கொள்ளப்படுகின்றது.

இதேபோன்று, நவீன சமூகத்திலும் தற்கொலை செய்வதென்பது பெரும் குற்றமாகவே கருதப்படுகின்றது. வேகமாக வளர்ந்து வரும் இன்றைய சமூகத்தில் தற்கொலை பற்றிய கலாசாரம் மற்றும் சமூகப்பார்வை வரையறை செய்யப்பட்டதொன்றாக அமையாமல் மாறுபட்ட வெறும் செய்தியாகவே இருந்து வருகின்றது.

இன்றைய இளைஞர், யுவதிகள் மத்தியில் நிலவி வரும் சமூக வெறுப்பும், தோல்விகளும் சுலபமாக துவண்டுவிடும் மன நிலையும் தற்கொலை பற்றிய பார்வையை மாற்றி வருகின்றது. தற்கொலை என்பது சிக்கல்களில் இருந்து தப்பிக்கும் ஒரு வழிமுறையாக பார்க்கப்படுகின்றது. வெளியேயுள்ள சமூக அவலங்களின் மீதுள்ள வெறுப்பைவிட தன்மேல் ஏற்படும் நம்பிக்கையின்மை, மற்றும் வெறுப்பே இளைஞர், யுவதிகளிடம் தற்கொலை செய்யும் எண்ணம் மேலோங்க காரணமாகவுள்ளது. ஆனால் வயதான

தற்கொலையாளர்களிடையே இதற்கான காரணத்தை நோக்கும் போது அவர்களுக்கு சமூகம் மீது ஏற்பட்ட வெறுப்பும் தாங்கள் தனிமைப்படுத்தப்பட்டதாக உணர்வதுமே பரவலாக காணப்படுகின்றன.

இவ்வாறு வெவ்வேறுபட்ட சமூகங்களை நாம் நோக்கும்போது தற்கொலைகளும் அதற்கான கருத்து நிலைகளும் வெவ்வேறாக காணப்பட்டாலும் பெரும்பாலான சமூகங்களில் இதுவொரு அருவருக்கத்தக்கதொன்றாகவும் பாரிய குற்றச்செயலாகவுமே கருதப்படுகின்றத.

மாறிவரும் வேகமான விஞ்ஞான வளர்ச்சி மிக்க உலகிலும் கூட தற்கொலைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. பொதுவாக தற்கொலை செய்யத் தூண்டும் காரணிகளை நோக்கும்போது குடும்பப்பிரச்சினை, வறுமை, காதல்தோல்வி, வேலையின்மை, போட்டிபொறாமை என பலவற்றை அவதானிக்க முடிகிறது. உலகளவில் வருடமொன்றுக்கு நான்கு லட்சம் பேர் தற்கொலை செய்து கொள்வதாக அறிய முடிகின்றது. மனிதன் இறந்து போகும் வழிமுறைகளை வரிசைப்படுத்தும்போது தற்கொலைதான் முதலிடம் பெறுகின்றது. உலகளவில் 80 செக்கன் இடைவெளிக்கிடையில் ஒருவர் வீதம் தற்கொலை செய்வதாக கணிப்புகள் கூறுகின்றன. ஒவ்வொரு ஆண்டிலும் சராசரி 3000 ற்கு மேற்பாட்ட அமெரிக்கர்கள் தற்கொலை முயற்சியில் ஈடுபடுவதாகவும், இதில் அதிகமானோர் இறந்து விடுவதாகவும் அறிக்கைகள் கூறுகின்றன. இது போன்றே ஏனைய பல நாடுகளும் இம்முயற்சிகளில் ஈடுபாடு காட்டி வருகின்றன.

உலக நாடுகளுக்கிடையே, தற்கொலை செய்யும் நபர்களை பார்க்கும் போது வயது, பால் அடிப்படையில் எண்ணிக்கை வேறுபாடுகள் காணப்படுகின்ற போதிலும் அதிகமான நாடுகளில் இளம் வயதினரே மிகவும் கூடுதலாக தற்கொலை முயற்சிகளில் ஈடுபடுவதனை அவதானிக்க முடிகின்றது. கனடா, பின்லாந்து, இஸ்ரேல், நெதர்லாந்து, நியுசிலாந்து, ஸ்பெயின், ஸ்விட்சர்லாந்து, தாய்லாந்து ஆகிய நாடுகளை விசேடமாக குறிப்பிடலாம்.

இதேபோன்று, இன்றைய சூழலில் போதைவஸ்து பாவிப்பவர்கள், படைவீரர்கள், நோயாளர்கள், மனநிலை பாதிப்படைந்தோர் என சமூக மட்டத்தில் பலரும் தற்கொலை முயற்சியில் நாட்டம் செலுத்துவதனை காணலாம். எனவே பரந்து விரிந்து செல்லும் விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சிகளை ஏதோவொரு வகையில் பின்னடையச் செய்வதாகவே தற்கொலை முயற்சிகள் அமைகின்றன.

## 3. இலங்கையில் தற்கொலைகளும், அது பற்றிய பொதுவான பார்வையும்.

அரசியல், சமூக, பொருளாதார, கலாசார மாற்றங்களினால் ஏற்படும் விளைவுகள் குடும்பங்களிலும் சிக்கல்களை தோற்றுவிக்கின்றன. இவை நாளடைவில் சமூகப்பிரச்சினைகளாகவும் உருவெடுக்கின்றன. இவற்றிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக தனிமனிதர்களும், குழுக்களும் தற்கொலை முயற்சிகளில் ஈடுபடுகின்றனர்.

இது இலங்கையில் 1960 முதல் அதிகரித்துச் செல்வதனை அவதானிக்க முடிகின்றது. இறப்பவர்களின் எண்ணிக்கையில் 52 வீதமானோர் தற்கொலை செய்தே இறந்துள்ளனர். எனப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. அதிகமாக பெண்கள் தற்கொலை முயற்சியில் ஈடுபடும் நாடுகளில் இலங்கையே முதலிடம் பெறுகின்றமையும் குறிப்பிடத்தக்கதொடு அம்சமாகும்.

இலங்கையில இடம் பெற்றிருக்கும் தற்கொலைகளையும், அதற்கான முயற்சிகளையும் ஆராயும் போது குறிப்பாக சில விடயங்களே பிரதான ஊக்கிகளாக அவதானிக்கப்படுகின்றன. பசுமைப்புரட்சியும் அதன் செயற்பாடும், இன, மத, சாதி, வர்க்க, குடும்ப முரண்பாடுகள், தகவல் தொடர்பு சாதனங்களின் போக்குகள், இலங்கை கல்வி முறைமை, இயற்கை அனர்த்த தாக்கங்கள் என்பன அவைகளாகும்.

எமது நாடு விவசாய நாடாகும். ஆனால் பசுமைப்புரட்சியும் கைக்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டது. அதனால் அதிகமான மக்களை விவசாயத்தின்பால் ஊக்குவிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இதன் காரணமாக கிருமிநாசினிகள், களைகொல்லிகள் பயன்பாட்டிற்கு வந்தன. மறுபுறம் விவசாயிகள் தனியார் வங்கிகளிலிருந்து வட்டிக்குக் கடன் பெற்று விவசாயத்தில் ஈடுபட்டனர்.

இயற்கை மழையை நம்பியே அதிகமானவர்கள் விவசாயத்தில ஈடுபட்டனர். பல் சந்தர்ப்பங்களில் அடுத்தடுத்து அறுவடைகள் குறைவாகவே இருந்ததனால் பெரும் நட்டமே தொடர்ந்தன. இதனால் கடல் தொல்லை, பொருளாதாரப்பிரச்சினை, வறுமை நிலை பெறத்தொடங்கின.

இவ்வாறான சிக்கல்களிலிருந்து விடுதலை பெறுவதற்கு மார்க்கம் வேண்டிய மனிதர் தற்கொலையே அதற்கான தீர்வெனக் கருதினார். இதற்கு ஏதுவாக கிருமிநாசினிகளும், களைகொல்லிகளும் அவர்களுக்கு அருகிலேயே இருந்ததனால் அவற்றைப் பாவித்து தம்மைத்தாமே அழிக்கத் தொடங்கினர்.

இலங்கை ஒரு பல்லின, மத மக்கள் வாழும் நாடாகும். அதனால் முரண்பாடுகள் எழுவதும் தவிர்க்க முடியாததொன்றாகும். குறிப்பாக இன முரண்பாடுகளால் குறிப்பிட்டதொரு இனம் குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டு அதிகமாக தற்கொலை செய்துவருகின்றது.

இதேபோன்று குடும்பத்திலும், சமூகத்திலும் எழும் சிக்கல்களால் தோன்றும் அவமானம், விரக்தி, மனநோய், கோபம் போன்ற காரணங்களாலும் தற்கொலை செய்கின்றனர்.

இலங்கை ஒரு சுதந்திர ஊடக கலாசாரத்தைக் கொண்ட நாடு. அதனால் இங்கு ஊடகங்களில் பல்வேறுபட்ட செய்திகளும் சுதந்திரமாக வெளியிடப்படுகின்றன. அவற்றில் காதல் தோல்வி, பெற்றோரின் அச்சுறுத்தல், பாலியல் பிரச்சினை, பொருளாதாரப் பிரச்சினை போன்ற பல் விடயங்களால் சிலர் தற்கொலை செய்து கொண்டதாக செய்திகள், விவரணங்கள், கட்டுரைகள் வெளிவருகின்றன. இவை, இது போன்ற பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டு விரக்தியுற்றிருக்கும் ஒருவரை தற்கொலை செய்ய தூண்டுகின்றன. இதுவொரு நேரடி காரணியாக இல்லாவிட்டாலும் ஒரு மறைமுகக் காரணியாக அமைந்துள்ளது.

இலங்கையில் கல்வி கற்பதில் போட்டி நிலவுகின்றது. 1970ம் ஆண்டின் பின் சில தொழில்கள் சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சலுகை உள்ள வகுப்புக்களில் உள்ளவர்களுக்கு மாத்திரமே எனத் தெரிய வந்தது. அதனால் சிந்தனை மாற்றம் ஏற்பட்டது. அதேபோன்று, உயர்கல்விக்காக இரண்டு வீதத்தினர் மாத்திரமே தகுதி பெறுகின்றனா. இவை போன்ற இலங்கையின் கல்விக்கொள்கையினால் மாணவர்களும், பெற்றோர்களும் உளரீதியான பாதிப்புக்குள்ளாகி இறுதியில் தற்கொலை செய்து விடுகின்றனர்.

இவ்வாறு பல காரணிகள் இலங்கையில் தற்கொலை வீதம் அதிகரித்துச் செல்லக் காரணமாய் அமைகின்றன. இந்நிலையில் தற்கொலை முயற்சிகளை கட்டுப்படுத்துவதற்கென பல நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் எடுத்துள்ளது. இதனடிப்படையில குற்றவியல் தண்டனைக்கோவை பிரிவு 302, 1998 ஜூனில் நீக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதொரு விடயமாகும். இதன் மூலம் தற்கொலை முயற்சியில் ஈடுபடும் ஒருவர் உயிர் தப்பும் பட்சத்தில் எந்தவிதமானதொரு சட்டரீதியான தண்டனைக்கும் உட்படாதவராய் காணப்படுகின்றார். இது தற்கொலை முயற்சிகளை ஊக்குவிக்கின்றன என்றும் சிலரால் விமர்சிக்கப்படுகின்றது.

இவ்வாறான பின்புலத்தோடு மட்டக்களப்பின் தற்கொலை பற்றி சமூகவியல் ரீதியாக பகுப்பாய்வு செய்ய முற்படும்போது, அதனோடிணைந்த பல விடயங்களை பகுத்தும், தொகுத்தும் நோக்க வேண்டியுள்ளது. அதாவது, இப்பிரதேசத்தில் காணப்படும் தற்கொலை பற்றிய பொதுவான பார்வையும், கருத்தும் இதற்கேதுவாக அமையும் சமூக, உளவியல் காரணிகள் எவை? இதனைச் செய்ய கையாளும் வழிமுறைகள் யாவை? மரணவீதம்

அதிகரிப்பதற்கான புறக்காரணிகள் யாவை? வயது, பால் அடிப்படையில இதன் பகுப்பும், தன்மையும். இதனை கட்டுப்படுத்த அரச, சட்ட, சமூக மட்டங்களில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் இதனை கட்டுப்படுத்த நாம் எவ்வாறான தீர்வுகளை முன்வைக்கலாம் என்ற விடயங்களின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட வேண்டியுள்ளது.

## 4. தற்கொலை பற்றி பொதுவான பார்வையும், கருத்தும்:

மட்டக்களப்பு பிரதேசத்தை பொறுத்த வரையில் இனம், மதம் எனப்வற்றின் அடிப்படையில் தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் என்றும் இந்துக்கள், கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் என்றும் வேறுபட்ட பல சமூகங்களை உள்ளடக்கிய மீன்பிடி, விவசாய தொழில்களை பிரதானமாக கொண்ட பிரதேசமாகும். வியாபாரம் மற்றும் அரசாங்க தொழில் புரிவதிலும் பலர் நாட்டம் செலுத்துகின்றனர்.

ஆரம்ப காலங்களில் இங்கு தற்கொலை குறைந்தளவிலேயே இடம் பெற்றிருக்கின்றன. காலம் செல்லச் செல்ல பொருளாதாரம், வாழ்க்கைத்தரம், சமூக அந்தஸ்து போன்ற இன்னோரன்ன விடயங்களிலும் மாற்றம் ஏற்படத் தொடங்கவே இவற்றுக்கொல்லாம் ஈடு கொடுக்க முடியாதவர்கள், தாங்களாகவே தம் வாழ்கையை அழித்துக்கொள்ளத் துணிந்திருக்கின்றாாகள்.

கிராமப்புறங்களில் குறிப்பாக தமிழ்க்கிராமங்களிலேயே அதிகமான தற்கொலை இடம்பெறுகின்றது. முஸ்லிம் கிராமங்களில் இது குறைவாகவே காணப்படுகின்றது. இதற்கு பொருளாதார ஏற்றத்தாழ்வே பிரதான காரணம். இதைவிட இனமோதலும் அதனால எழும் சிக்கல்களும் கூடச் செல்வாக்குச் செலுத்துகின்றன.

இவ்வாறு தற்கொலை முயற்சிகளில ஈடுபடுபவர்களை இச்சமூகம் பல விதங்களில் நோக்குகின்றது. தமிழர்கள் இதனைப் பாவமான செயலாகவே கருதுகின்றனர். குறிப்பாக இந்துக்கள், தற்கொலை செய்பவரின் ஆவி தம் மத்தியில உலாவுவதாகவும், ஏதோவொரு சந்தர்ப்பதில் அவை தம்மை அதிர்ச்சியடையச் செய்வதாகவும் நம்புகின்றனர்.

கத்தோலிக்கர்களும் பாவமான செயலாகவே கருதுகின்றனர். பொதுவாக இறந்தவரின் உடலை ஆலயத்திற்கு எடுத்துச் சென்று ஆராதனைகள் செய்த பின்னரே நல்லடக்கம் செய்வார்கள். ஆனால் தற்கொலை செய்பவர்களின் உடலை ஆலயத்திற்குள் எடுத்துச் செல்ல முடியாது. அவர்களுக்கான ஆராதனையும் அங்கு இடம்பெறாது. இவர்களது ஆன்மாக்கள் நரகத்துக்குச் செல்வதாகவும் நம்புகின்றனர்.

இஸ்லாமியர்கள் மத்தியில் இதுவொரு குற்றச் செயலாகவே கருத்ப்படுகின்றது. அதனால் அவர்கள் மத்தியில் இது குறைவாகவே இடம்பெறுகின்றது.

இவ்வாறு தற்கொலை முயற்சியில் ஈடுபடும் நபரின் குடும்பமும் சமூகத்தால் குறைத்தே மதிப்பிடப்படுகின்றது. குடும்பம் மற்றும் உறவினர்களின் வழிநடத்தலிலும் குறை கூறப்படுகின்றது. இதனால் குடும்பத்தவர்களும் அவப்பெயருக்கு உள்ளாக வேுண்டிய நிலை ஏற்படுகின்றது.

## 5.இதற்கேதுவாக அமையும் சமூக, உளவியல் காரணிகள:

தற்கொலை செய்ய முயற்சித்தவர்களையும், தற்கொலை செய்து கொண்டவர்களையும் ஆய்வுக்குட்படுத்தி என்ன காரணங்களுக்காக இதனை மேற்கொண்டார்கள் என ஆராய்ந்த போது இதற்கேதுவாக அகவயம் சார்ந்த உளவியல் காரணிகளும், புறவயம் சாாந்த சமூகக் காரணிகளும் பிரதானமாக செல்வாக்குச் செலுத்தியிருப்பதனை அவதானிக்க முடிகின்றது.

சமூகக் காரணிகள் எனும்போது தனிமைப்படுத்தப்படல், சமூகத்தொடர்புகள் அற்றுப்போதல், அவமானப்படுத்தல், தண்டனைக்குட்படுத்தல், தாமாகவே ஒதுங்கிக்கொளுதல், நோய்வாய்ப்படுதல், அரசியல் ரீதியான ஒடுக்குதல் என்பவை முக்கிய காரணிகளாக காணப்படுகின்றன.

மனிதன் ஒரு சமூகப்பிராணி, அதனால் அவன் சமூகத்தில் எல்லோருடனும் சரிசமமாக இணைந்தே வாழவிரும்புகிறான். மேலே நாம் குறிப்பிட்டுள்ள காரணிகளின் செல்வாக்கினால் இது நிகழாதபோது தற்கொலை செய்யத் துணிகின்றான்.

உளவியல் காரணிகள் எனும் போது, தான் வாழும், தொழில்புரியும் இடங்களில் தோன்றும் சமூகக் காரணிகளின் தாக்கத்தினால் ஏற்படும் வெறுப்புத்தன்மை, நம்பிக்கையின்மை. ஆற்றாமை, பயம், கோபமடைதல் போன்ற தற்கொலை நோக்கியதான எண்ணத்தை தூண்டும் காரணிகளாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பொருளாதரம், கல்வி, கலாசாரம், குடும்பம் போன்ற சமூக அமைப்புக்களில் ஏற்படும் மாற்றங்களில் காரணமாக இடம்பெறும் தற்கொலைகளே அதிகமானவையாகும். நாட்டில் இடம்பெறும் இன ரீதியான ஒடுக்குமுறையும் இன்னுமொரு காரணமாகும்.

இங்கு விவசாயமும், மீன்பிடியுமே பிரதானமான தொழில்கள், இவை இரண்டுமே குறிப்பிட்ட காலநிலைகளை அடிப்படையாக கொண்டு செய்யப்படுபவை அதனால் சீரான வருமானம் என்பது கிடைப்பதில்லை. இது காலநிலையோடு ஒட்டியதொன்றாகும். காலநிலையின் மாற்றத்திற்கேற்ப பொருளாதாரமும் மாற்றமுறுகின்றது. இதில் பின்னடைவு ஏற்படுகின்றபோது தற்கொலை செய்யும் நிலை ஏற்படுகின்றது.

நாட்டின் யுத்த சூழ்நிலை காரணமாக குடும்ப தலைவர்களை இழந்த பெண்களே அதிகமாக தமது குடும்பங்களைப் பராமரிக்க வேண்டிய இக்கட்டான சூழ்நிலை காணப்படுகின்றது. அதனால் நாளாந்தக் கூலி வேலை செய்தும் சிறுசிறு வியாபாரங்களில் ஈடுபட்டும் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்றும் சம்பாதிக்கின்றனர். இவ்வேளைகளில் பல்வேறுபட்ட உடலியல், உளவியல் ரீதியான இன்னல்களை எதிர்கொள்ளும் இவர்கள் தற்கொலையில் ஈடுபடுகின்றனர்.

அதேபோன்று இச்சூழ்நிலை காரணமாக சிறுவர்கள், இளைஞர், யுவதிகள் தமது பாதுகாவலர்களையும், பராமரிப்பாளர்களையும் இழந்து ஆதரவற்றவர்களாகவும் தமது விருப்பின்படியும் வாழ்கின்றார்கள். அதனால் பல் வேறுபட்ட சிக்கல்களையும், இன்னல்களையும் எதிர்கொண்டு மீளமுடியாமல் தற்கொலை செய்கின்றனர்.

இவ்வாறாக இன்றைய சூழலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல சமூகப் பிரச்சினைகள் அதாவது சமூக ஒட்டின்மை, பாலியல், சிறுவர் துஸ்பிரயோகங்கள், பரீட்சையில தோல்வி, குடும்பப்பிணக்கு என ஏராளம். இவ்வாறான பிரச்சினைகளை எதிர்கொண்டோரில் 70 வீதமானோர் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாறான சமூக காரணிகளினால் பாதிக்கபபட்ட உளவியல் ரீதியாக பாதிப்படையும் ஒருவர் நித்திரையின்மை, பசியின்மை, ஞாபகமறதி, களைப்பு, வெறுப்பு, கோபம், பலவீனம், போன்றவற்றால் பீடிக்கப்பட்டு இறுதியில் தற்கொலை முயற்சியில் ஈடுபடுகின்றனர்.

## 6. இதனைச் செய்யக் கையாளும் வழிமுறைகள்:

மட்டக்களப்பு மாவட்டத்தில் நஞ்சருந்தல், சுருக்கிடுதல், நீரில் மூழ்குதல், தீ வைத்தல், ஓடும் வாகனத்தின் முன் பாய்த்ல், கூரிய ஆயுதங்கள் மற்றும் துப்பாக்கியால் தாக்குதல் போன்றவை பிரதான வழிமுறைகளாகக் காணப்படுகின்றது.

நஞ்சருந்துதல் எனும் போது கிருமி நாசினி, களைகொல்லி, அலரிவிதை, நச்சுக்காய், மலத்தீன் (டீடீரீ), எலிப்பாசணம், சயனைற் போன்றவற்றைப் பயன்படுத்தி தற்கொலை செய்வதனைக் குறிக்கும்.

இம்மாவட்டத்தில் வீட்டுத்தோட்டம் முதல் சேனைப்பயிர் செய்கை வரைக்கும் களைகொல்லி கிருமிநாசினிகளைப் பயன்படுத்துவர். அதனால் அதிகமான வீடுகளில் இவற்றைக் காணலாம் குடும்பங்களில் இடம்பெறும் சிறு சிறு பிரச்சினைகளுக்கும் சமூக

முரண்பாடுகளுக்கும் முகங்கொடுக்கும் போது அதிலிருந்து தப்புவதற்காக மிகவும் இலகுவாகவே வீட்டில் கிடைக்கும் இவற்றினை அருந்தி தற்கொலை செய்து கொள்கின்றனர்.

ஏனைய வழிமுறைகளோடு ஒப்பிடும் போது இவற்றை பயன்படுத்தி தற்கொலை செய்திருக்கும் வீதமே அதிகமாகும். மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் பெறப்பட்ட புள்ளிவிபரங்களின்படி, 1995ம் ஆண்டிலிருந்து 2005 நடுப்பகுதி வரை 378 பேர் இவற்றினை அருந்தித் தற்கொலை செய்கின்றனர்.

கடல், ஆறு, குளம், கிணறு போன்ற நீர் நிலைகளில் மூழ்கியும், வீடு மற்றும் தொழில் புரியும் இடங்களில் தீயிட்டும் செய்யும் தற்கொலைகள் கணிசமானளவு இடம்பெறுகின்ற போதிலும், அவை தற்கொலைகளாகச் சொல்லப்படுவதில்லை. பல்வேறுபட்ட சமூக காரணங்களுக்காக அவை மூடிமறைக்கப்படுகின்றன. அதனால் இவற்றில் அதிகமானவை விபத்தென்ற வரையறைக்குள் சென்று விடுகின்றன.

கூரிய ஆயுதங்கள் மற்றும் துப்பாக்கிகளை பயன்படுத்தி செய்யும் தற்கொலைகள் மிகவும் குறைவாகவே இடம்பெறுகின்றன. இருந்தபோதிலும் படையினர் மத்தியில் விடுமுறை பெறுதல், தண்டனை கொடுத்தல் போன்ற முரண்பாடுகள் ஏற்படுகின்ற போது இவ்வாறான தற்கொலை இடம்பெறுவதை அவதானிக்க முடிகிறது.

## 7. மரணவீதம் அதிகரிப்பதற்கான புறக்காரணிகள்:

சமூக, உளவியல் காரணங்களினால் செய்யப்படும் தற்கொலைகள் மரண வீதத்தில் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. இதற்கு புறவயமான பல காரணங்களும் செல்வாக்குச் செலுத்துகின்றன. அதாவது, வைத்திய மற்றும் போக்குவரத்து வசதிகள் போதாமை, யுத்த கெடுபிடியும் அதனோடிணைந்த அச்ச சூழலும், கசிப்பு மற்றும் போதைப்பொருட்களின் அதிகரிப்பும் பாவனையும், அறியாமை மற்றும் ஆன்மீகம், உளவியல் சார்ந்த ஆலோசனைகள் இல்லாமை போன்ற குறிப்பிடத்தக்க காரணிகளாகும்.

தற்கொலை முயற்சியில் ஈடுபடுபவர்களை தனியார் மருத்துவமனைகளில் அனுமதிக்க அச்சம் தெரிவிக்கின்றார்கள். அதனால் அரச மருத்துவ மனைகளையே நாட வேண்டிய கட்டாய நிலை ஏற்படுகின்றது. நீண்ட இடைவெளிகளுக்கிடையில் வாழைச்சேனை, செங்கலாடி, ஏறாவூர், மட்டக்களப்பு, காத்தான்குடி, களுவாஞ்சிக்குடி என்ற இடங்களிலேயே அரச வைத்தியசாலைகள் உள்ளன. அதனால் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டவரை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும்போது வழியிலேயே இறக்கும் நிலை ஏற்படுகின்றது.

மாவட்டத்தின் குறிப்பாக கிராமங்களின் பாதை மற்றும் போக்குவரத்து வசதிகள் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றன. அதனால் தற்கொலை முயற்சியில ஈடுபடும் நபரொருவரை காப்பாற்றுவதற்காக "கைவைத்தியமே" செய்கின்றார்கள். அது பயன் தராத வேளையில் மரணம் ஏற்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் அதிகமான பிரதேசங்கள் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாதவை. அங்குள்ள மக்கள் இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் நுழைய பயப்படுகின்றனர். அவர்கள் வந்தாலும் கூட பல்வேறுபட்ட கெடுபிடிகளுக்கும் உட்படுத்தப்படுகின்றனர். அதனால் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு மருத்துவ உதவி தேவைப்படுபவரை இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள வைத்திய சாலைகளில் சேர்ப்பிக்க யாரும் முன்வருவதில்லை. அதனால் அந்நபர் இறக்கும் நிலை ஏற்படுகின்றது.

போதைப்பொருள் பாவனை அதிகரிப்பும், இரசாயன பரிசோதனைகளற்ற மதுபான (கசிப்பு) உற்பத்தியும், பாவனையும் அதிகளவு காணப்படுகின்து. இதில் ஈடுபடும் பலர் அளவு கணக்கற்ற விதத்தில் மதுசாரத்தை உட்கொண்டு உடல் மற்றும் உளரீதியான பாதிப்பை மட்டுமின்றி குடும்பத்திலும், சமூகத்திலும் பல்வேறுபட்ட சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். இறுதியில் தற்கொலையை நாடுகின்றனர்.

தற்கொலை எண்ணம் ஏற்படும் நபரொருவர் அதன் தாற்பரியத்தை அறியக்கூடிய வசதிகளோ, ஆலோசனையோ இல்லை. அதனால் இலகுவாக இதனை செய்யக்கூடிய சூழல் ஏற்படுகின்றது. அதேபோன்று, தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு உயிர் பிழைக்கும் நபரொருவர் சமூகத்தின் பல்வேறுபட்ட கேலிப்பேச்சிற்கும் உட்படுத்தப்படுகிறார். அதனால் அந்நபர் மீண்டும் தற்கொலை செய்யும் நிலை தோன்றுகின்றது.

## 8.வயது, பால் அடிப்படையிலான பகுப்பு முறை:

தற்கொலை பற்றி ஆராயும் போது வயது மற்றும் பால் அடிப்படையில் பார்க்க வேண்டிய தேவை எழுகின்றது. ஏனெனில், தற்கொலைக்கேதுவாக அமையும் சமூக, உளவியல் காரணிகள் இவற்றின் அடிப்படையிலேயே தமது செல்வாக்கினைச் செலுத்தகின்றன.

பத்து வயது முதல் எழுபது வயது வரையானவர்கள் வரை இங்கு தற்கொலை முயற்சியில் ஈடுபடுவதை காணலாம். வயது வேறுபாட்டுக்கேற்ப தற்கொலைக்கான காரணமும், எண்ணிக்கையும், வழிமுறைகளும் மாறுபடுகின்றன. இவர்களில் இருபது வயதுக்கும் முப்பது வயதுக்கும் இடைப்பட்டவர்களே அதிகமாக இம் முயற்சிகளில் ஈடுபடுகின்றார்கள் எனப் புள்ளி விபரங்கள் காட்டுகின்றன. இருந்த போதிலும் தற்போதய சூழலில் இவ்வயதெல்லையினரின் தற்கொலைகள் சற்று குறைந்தே காணப்படுகின்றது. 1991ம் ஆண்டு 2374ஆக இருந்த எண்ணிக்கை 2005 ம் ஆண்டு நடுப்பகுதி வரை 2030 ஆக குறைவடைந்துள்ளது. அதாவது 14.5 வீதம் குறைவடைந்துள்ளது.

அதேநேரம் முதியோர் மரணவீதம் அதிகரித்துள்ளது. 1991ம் ஆண்டு 911ஆக இருந்த எண்ணிக்கை 2005ம் ஆண்டு 1369 ஆக அதிகரித்துள்ளது இதற்குச் சமூக மாற்றமே காரணமாகும்.

பால் அடிப்படையில் நோக்கும்போது எண்ணிக்கையில் அதிகமான பெண்களே தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இருந்த போதிலும் இம்முயற்சியில் ஈடுபட்ட ஆண்களே அதிகம் இறந்தள்ளனர். இதில் தற்கொலைக்குப் பயன் படுத்திய சாதனம் செல்வாக்கு செலுத்தியுள்ளது.

ஆனால் யுத்த சூழ்நிலை காரணமாக அதிகமான பெண்கள் தற்கொலை செய்யும் நிலை உருவாகியுள்ளது. 1995ம் ஆண்டிலிருந்து 2005ம் ஆண்டு நடுப்பகுதி வரை தற்கொலை முயற்சியில் ஈடுபட்டவர்களில் 1997 பேர் உயிர் தப்பியுள்ளனர். இதில் ஆண்கள் 972 பேர் பெண்கள் 1005 பேர். அதேபோன்று, இக்காலப்பகுதியில் தற்கொலை செய்துள்ளவர்களின் எண்ணிக்கை 673 ஆகும். இதில், 332 ஆண்களும் 341 பெண்களும் அடங்குவர். இதற்கு அரசியல் சமூகப் பொருளாதார பண்பாட்டு மாற்றங்களே காரணமாகும்.

## 9. இதனைக் கட்டுப்படுத்த அரச, சட்ட, சமூக மட்டங்களில் எடுக்கப்படும் நடவடிக்கைகள்:

தனியொரு மனிதன் தன் விருப்பத்திற்கேற்ப தற்கொலை செய்கின்ற போதிலும், இச்செயலானது குடும்பம், அவன் சார்ந்த சமூகம், அரசாங்கம், தேசம் என சகல மட்டங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. ஆகவே, இதனை ஒரு தேசிய பிரச்சினையாகவே நோக்கவேண்டியுள்ளது. இதனடிப்படையில் இதனை தடுப்பதற்காக நாட்டில் எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என ஆராயவேண்டியுள்ளது.

இம்முயற்சியில் ஈடுபடும் எவரொருவருக்கும் மனிதாபிமான ரீதியில் வைத்திய உதவிகளை வழங்குவதோடு, சட்டம், நீதி, நிர்வாகம் என்ற துறைகளுக்கூடாக அரசு தண்டனை, மன்னிப்பு, ஆலோசனை, பரிகாரம் போன்ற நடவடிக்கைகளை வழங்கிவருகின்றது. அதேபோன்று அதற்கேதுவாக அமையும் காரணிகளை இனம் கண்டு மாற்று நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றது.

தற்கொலையைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசு தேசிய மட்டத்தில் விஸ்தரித்துள்ளது. தற்கொலை செய்யும் எண்ணமுள்ளவர்கள் என இனங் காணபவர்களை தேடிக் கண்டுபிடித்து அதற்கெதிரான ஆலோசனைகளை வழங்குவதுடன், அதற்கேதுவாக உள்ள காரணிகளையும், வழிமுறைகளையும் மட்டுப்படுத்தி, அதனை நாடவிடாது தடுக்கின்றது. அதேபோன்று இதற்கேதுவாக உள்ள புறக்காரணங்களை கண்டறிந்து அவற்றினைச் சீர் செய்கின்றது.

இம்முயற்சியில் ஈடுபட்டு ஆபத்தான நிலையில் இருப்பவர்களின் உயிர்களை காப்பாற்றும் நோக்கோடு போதிய மருத்துவ, போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றது.

தற்கொலையை தடுப்பதற்கான அமைப்புக்கள் மற்றும் செயற்றிட்டங்களை உருவாக்கி தேசிய மட்டத்திலிருந்து கிராமங்கள் வரை விஸ்தரித்து சிறுவர்கள், இளைஞர்கள், முதியோர்கள் என சகல மட்டங்களிலும், பாடசாலை, அலுவலகம், இல்லம் என்ற சமூகத்தின் ஒவ்வொரு மட்டங்களிலும் தற்கொலைக்கெதிரான கல்வி மற்றும் கலாசார திட்டங்களை நடைமுறைப்படுத்தி குறிப்பிட்ட காலப்பகுதிக்கு ஒருமுறை விழிப்புணர்வு நிகழ்ச்சிகளையும் நடாத்தி வருகின்றது.

தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு உயிர் தப்பும் நபரொருவர் மீண்டும் அவ்வாறு செய்யாதிருப்பதற்காக அவர் மீது குற்றவியல் தண்டனைக்கோவை 302 வது பிரிவின்படி தண்டனைக்குட்படுத்தினர். இது மறைமுகமாக இதில் ஈடுபடுபவர்களின் தொகையை குறைத்தது. ஆனால் 1998 ஜூனில் இதனை நீக்கிவிட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டுமின்றி நாடு முழுவதிலும் கிருமிநாசினியை அருந்தி தற்கொலை செய்வோரின் தொகையே மிகவும் அதிகமாகக் காணப்படுகின்றது. அதிலும் 18 வயதுக்குட்பட்டவர்களே அதிகமாக இதனைப் பயன்படுத்துவதையும் ஆய்வுகளினூடாக அறியமுடிகிறது. அதனால், இவ்வாறு தற்கொலைக்குப்பயன்படுத்தக் கூடிய நச்சு இரசாயனக் கிருமிநாசினிகளை மட்டுப்படுத்துவதோடு, மனிதனுக்கு உயிர்ச்சேதத்தை ஏற்படுத்தாத வகையில அவற்றைத் தயாரிப்பதற்கும் சட்ட ரீதியான ஆலோசனைகளையும் வழங்கிவருகின்றது. அத்தோடு 18 வயதுக்குட்பட்டவர்களுக்கு கிருமிநாசினிகளை விற்பனை செய்யக் கூடாதெனவும் சட்டம் தடை செய்கிறது. தற்கொலை செய்வதற்கேதுவாக அமையும் இன்னுமொரு ஊக்கியான கசிப்பு உற்பத்தியை சட்டவிரோத செயலாக கூறும் அதே வேளை அதில் ஈடுபடுபவர்களுக்கு பாரிய தண்டனைகளையும் வழங்குகின்றது. அதுமட்டுமின்றி இதனை அருந்துபவர்களையும் குற்றவாளிகளாக கூறுகின்றனர்.

சட்டரீதியான நடவடிக்கைகள், தண்டனை மற்றும் பரிகாரம் வழங்குதல் என்பவை அரசினால் மேற்கொள்ளப்பட்டாலும், சமூக விழிப்பு இல்லாவிட்டால் இது இன்னும் அதிகரித்துக் கொண்டே செல்லும் என்பதனால் சமூகச் செயற்பாடுகளை ஒட்டியதாக பல நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றது.

கிராமங்கள் தோறும் மதியுரைக்குழுக்களை அமைத்து அதற்கூடாகத் தற்கொலைக்கெதிரான கருத்துக்களையும், அறிவுரைகளையும் வழங்கி வருவதோடு இதனைப் புரிவதற்கான காரணங்களை இனம் கண்டு அதனை மாற்றியமைப்பதற்காண நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டுமன்றி நாடு முழுவதிலும் தற்கொலை செய்வதற்கு கிருமிநாசினிகளை பயன்படுத்துவதால், இதன் பாவனை மற்றும் பாதிப்புகள் தொடர்பான ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றது.

சமூக நடத்தையை தீர்மானிக்கும் சக்தி உருவெடுத்திருக்கும் ஊடகத்துறையில், தந்கொலை தொடர்பான செய்திகள் மற்றும் கருத்துக்களை வழங்கும்போது அவை மிகவும்

நிதானமாக செயற்படவேண்டும் எனப் பணிக்கப்பட்டுள்ளதோடு, அதற்கு பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றது.

குடும்ப ரீதியாகவும் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. வறுமையின் காரணமாக தற்கொலை முயற்சியில் ஈடுபடுவதனால் பொருளாதர ரீதியாக ஒவ்வொரு குடும்பமும் ஏற்றம் பெறும் வகையில் பல்வேறுபட்ட திட்டங்களை முன்னெடுக்கப்படுகின்றன.

அதுமட்டுமின்றி குடும்ப உறுப்பினர்கள் மத்தியில் அன்பு, பாசம், பரிவு போன்ற குடும்ப ஒற்றுமையை பேணும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

இவ்வாறாக கிராமங்கள் முதல் அரச உயர் மட்டங்கள் வரை பல்வேறுபட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும், மட்டக்களப்பு மாவட்டம் உட்பட நாடுமுழுவதிலும் தற்கொலை செய்வேரின் தொகை குறைந்தபாடக இல்லை. ஆகாவே இதனை கட்டுப்படுத்த நாம் எவ்வாறான தீர்வுகளை முன்வைக்கலாம் என்று கவனிக்க வேண்டும்.

## 10.இதனைக் கட்டுப்படுத்த நாம் முன்வைக்கும் தீர்வுகள்:

மேலே நாம் பார்த்த விடயங்களை அரசும் சமூகமும் இதயசுத்தியோடு அமுலாக்கி உரிய முறையில் கடைப்பிடித்தாலே தற்கொலையில் ஈடுபடுவோரின் தொகை பெருமளவில் குறைந்துவிடும். அவற்றுக்கு மேலாக, தற்கொலைக்குப் பாவிக்கும் கிருமிநாசினி போன்ற நச்சுத்திரவங்கள் இலகுவாக கிடைக்கக்கூடிய வழிமுறைகளைக் கண்டறிந்து அவை இலகுவாக கிடைக்காமல் செய்ய வேண்டும், அதேபோன்று நச்சுக்காய், அலரிவிதை போன்றவற்றைத் தரும் மரங்களை அழிக்க வேண்டும்.

ஒப்பீட்டடிப்படையில் தற்கொலை பெரிதும் பரவியுள்ள பிரதேசங்களில் உள்ள மருத்துவ வசதிகளை மேம்படுத்த வேண்டும். தற்கொலை முயற்சியில் ஈடுபடுபவர்களை கவனிக்கவென விசேட சிகிச்சை நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும். நச்சுன்டவர்களுக்கு மருத்துவம் செய்யவென விசேட வைத்திய உத்தியோகத்தர்களை நியமித்துப் பயிற்றுவிக்க வேண்டும்.

ஊடகங்கள் இது தொடர்பான செய்திகளை, கருத்துக்களை கொடுக்கும் போது மேலும் இதில் எவரும் ஈடுபடாத வகையில் கருத்துக்களை முன்வைக்க வேண்டும். அது மாத்திரமின்றி இதில் ஈடுபட்டு உயிர் தப்பிய ஒருவரை மீண்டும் அந்நிகைக்கு உட்படுத்தாததாகவும் இருக்க வேண்டும்.

பிரதேச மட்டத்தில் இளைஞர் மற்றும் ஊக்குவிப்பு திட்டங்களினூடாக உடலியல், உளவியல் ரீதியாக ஒவ்வொருவரும் எதிா கொள்ளும் இடர்களை மதத்தலைவர்கள், ஆலோசகர்கள், புத்திஜீவிகளோடு கலந்துரையாடி அதற்கான தீர்வுகளைப் பெறக்கூடிய வகையில் அவை ஒழுங்கமைக்கப்பட வேண்டும். உளவியல் ரீதியான சிகிச்சை பெறக்கூடிய வகையில் வசதிகளை ஏற்படுத்த வேண்டும். கிராமங்கள் தோறும் பொழுது போக்கு நிலையங்களை அமைத்து மனித மனங்கள் மகிழ்ச்சியாக இருக்கச் செய்ய வேண்டும்.

பல்லின, மத, சமூகம் வாழும் மட்டக்களப்பு மாவட்டத்தில் குறிப்பாக தமிழா மத்தியில் சாதி, குடி எனற பாகுபாடும் காணப்படுகின்றது. இதனடிப்படையில் பல பிரச்சினைகள் தோன்றி தற்கொலைக்கு இட்டுச் செல்கின்றன. இவையும் கவனிக்கப்பட வெண்டியதொன்றாகும்.

பாடசாலை மட்டத்திலிருந்தே தற்கொலை, செய்வதனால் எற்படும் தீமைகள் பற்றி பாடம் புகட்ட வேண்டும். அலுவலகங்கள் மற்றும் முரண்பாடுகள் தோற்றம் பெறும் இடங்களிலெல்லாம் தீர்வுகளுக்கான முன்னெச்சரிக்கைகளை பெறச்கூடிய வழிவகைகளளை ஏற்படுத்த வேண்டும்.

குடும்ப உறுப்பினர்களுக்கிடையில் கருத்துக்களை பரிமாறக்கூடிய வகையில் குடும்ப கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும். விழாக்கள், கொண்டாட்டங்கள் போன்றவற்றில்

குடும்பத்தினர் அனைவரும் பங்கேற்று மகிழ்சியடையும் வகையில் அது அமைக்கப்பட வேண்டும்.

தொழிலின் நிமித்தம் அதிகமானோர் மத்தியகிழக்கு போன்ற நாடுகளுக்கு செல்கின்றார்கள். சில குடும்பங்களில் தாய், தந்தை என இருவருமே செல்கின்றனர். அதனால் பாதிக்கப்படும் பிள்ளைகளும் தற்கொலை செய்யும் நிலை காணப்படுகின்றது. அதனால் இவர்கள் தொடர்பான பார்வை அதிகப்படுத்தப்படும்போது இதனைத் தடுக்கலாம்.

யுத்தம் காரணமாக உழைக்கும் குடும்ப அங்கத்தவர்களை இழந்த குடும்பங்களில் பல்வேறுபட்ட சிக்கல்கள் தோற்றம் பெறுகின்றன. அவற்றைத்தீர்க்க முடியாமல் குடும்பத்தோடு கூட தற்கொலை செய்யும் நிலை உருவாகியுள்ளது. ஆகவே இவர்கள் பக்கமாகவும் எமது பார்வை திரும்பவேண்டியுள்ளது.

அண்மைக்காலத்தில் இடம்பெற்ற சுனாமி அனர்த்தம் காரணமாக பெற்ரோரை இழந்த பிள்ளைகள், பிள்ளைகளளை இழந்த பெற்றோர், உடமைகளை இழந்தோர், நிரந்தர நோய்க்குள்ளானோர், அங்கவீனமுற்றோர் என உளவியல், உடலியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டோரும் தற்கொலை செய்யும் நிலை தேன்றியுள்ளது. ஆகவே, இவற்றுக்கான தீர்வுகளும் முன்வைக்கப்பட வேண்டும். இதனால் தற்கொலை செய்யும் நிலையைத் தடுக்கலாம்.

முடிவாக, மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்றிருக்கும் தற்கொலைகளை ஒட்டுமொத்தமாக நோக்கும்போது ஒவ்வொருவரின் தற்கொலை முனைப்புக்கும் 100 வீதம் அவர்தான் காரணம் என்று கூறமுடியாதுள்ளது. 30 வீதமே அந்நபரின் முனைப்பாகவுள்ளது. அல்லது அந்நபரது மரபணுக்களால் ஏற்பட்டிருக்கிறது. மிகுதி 70 வீதமும் சமூகத்திடம் இருந்தே அந்நபரை நோக்கிச் சென்றிருக்கிறது.

தற்கொலை செய்யுயத்துணியும் நபரொருவருக்கு மருத்துவம், பரிகாரம், தண்டனை, மன்னிப்பு, ஆலோசனை என அனைத்துமே வழங்கப்பட்டாலும் சமூக நடத்தையில் பிறழ்வு ஏற்படும்போது அந்நபர் தற்கொலையை நாடுகின்றார் என்பது தெளிவாகின்றது.

ஆகவே, தற்கொலையை நாமோ மற்றவரோ நாடாமல் இருக்க வேண்டுமானால், சமூகநெறியை ஒழுங்காகக் கடைப்பிடிக்க வேண்டி கட்டாயத்தேவை எம் ஒவ்வொருவருக்கும் உள்ளது.